## 2.16 2005–06 ராயபுரம் தொகுதியில் ரூ.54.35 இலட்சம் மதிப்பீட்டில் – சில பணிகள் மேற்கொள்ள சிறப்பு அனுமதி

ஊரக வளர்ச்சி (மா அதி2) துறை

அராசணை(நிலை) எண்.21 நாள் : 21.2.2006

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி (மதி1) துறை நாள் 19.6.2002
2. அரசாணை (நிலை) எண்.120 ஊரக வளர்ச்சி (மதி1) துறை நாள் 29.7.2004
3. அரசாணை (நிலை) எண்.30 ஊரக வளர்ச்சி (மதி1) துறை நாள் 10.3.2005
4. அரசாணை (நிலை) என்.59, ஊரக வளர்ச்சி (மதி1) துறை நாள் 3.5.2005
5. அரசாணை (நிலை) எண்.116, ஊரக வளர்ச்சி (மதி1) துறை நான் 18.8.2005
6. சென்னை மாநகராட்சி ஆணையாளர் க.து.ந.க.எண்.பி6/585/2005 நாள் 10.10.2005 மற்றும் 5.1.2006.

**ஆணை**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம் குறித்து ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் தொகுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2005–2006 ஆம் ஆண்டுக்கு சட்டமன்றத் தொகுதி ஒவ்வொன்றுக்கும் முறையே ரூ.1 கோடி என தொகையை உயர்த்தி நிர்ணயித்தும் அதில் முன்னுரிமைப் பணிக்ளுக்காக நிதி ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணையிடப்பட்டுள்ளது. நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட முன்னுரிமைப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்கான 2005–2006 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கத்தினை பகிர்ந்தளித்து ஆணையிடப்பட்டுள்ளது. ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முன்னுரிமை மற்றும் இதர பணிகளை நகரப்பகுதிகளை உள்ளடக்கிய தொகுதிகளிலும் செயல்படுத்த முன்னுரிமை ப் பணிகளில் மாற்றம் செய்யவும் இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் கூடுதல் பணிகள் சேர்த்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சட்டம் (மற்றும்) தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சர் அவர்கள் இராயபுரம் தொகுதி மிகச் சிறிய தொகுதியாக இருப்பதாலும் வழிக்காட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லாப் பணிகளையும் அவரது தொகுதியில் மேற்கொள்ள இயலாது என்பதாலும் அதனால் அவருடைய தொகுதி மக்களின் தேவைக்கேற்ப 2005–2006 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் பின்வரும் 7 பணிகளை பரிந்துரை செய்துள்ளதாக சென்னை மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

| வ.எண் | பணி விவரம் | பரிந்துரை செய்த தொகை ரூ. இலட்சங்களில் |
|---|---|---|
| 1. | இராயபுரம் தொகுதி 18–வது வட்டத்தில் வடக்கு மாதா தெருவில் சிறிய மீன் அங்காடி ஒன்று கட்டும் பணி | 6.00 |
| 2. | இராயபுரம் தொகுதி, 22–வது வட்டத்தில் கல்லறைச் சாலையில் அமைந்துள்ள அண்ணா பூங்காவில் பொதுமக்கள் உபயோகத்திற்காக காத்திருப்புக்கூடம் (Waiting shed) ஒன்று கட்டும் பணி | 6.00 |
| 3. | இராயபுரம் தொகுதி 14–வது வட்டத்தில் உள்ள மாநகராட்சி தொற்றுநோய் மருத்துவமனையில் புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகளுடன் தங்கியிருப்பவர்களுக்கு என்று தனியாக காத்திருப்போர் அறை(RCC Roof மற்றும் அமரும் வசதியுடன்) கட்டும் பணி | 2.50 |
| 4. | இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் மொத்தம் 398சாலைகளில் பெயர் எப்பொழுதும் தெரியும் வண்ணம் | |

| | | |
|---|---|---|
| | அலுமினியத்திலான பெயர் பலகைகள் செய்யவும் அவற்றை சிறுசுவர் எழுப்பி அதன் மீது பொருத்தவும் 768 பெயர் பலகைகள் பொருத்தும் பணி. | 25.37 |
| 5. | ஐந்து பேருந்து நிறுத்தங்களில் பயணிகளின் வசதிக்காக ஒவ்வொரு நிறுத்தத்திலும் ஷெட் ஒன்றினை அமைக்கும் பணி (ஒரு லட்சம் வீதம்) | |
| | அ. எஸ்.என்.செட்டி சாலை (புதுசூரன் குடி சத்திரம் அருகில்) | |
| | ஆ. எஸ்.என்.செட்டி சாலை கதவு எண்.325,326 மனோன்மணி கூல் பார் அருகில் ) | |
| | இ. ஜீவரத்தினம் சாலை (புது பெட்ரோல் பங்க எதிரில்) | |
| | ஈ. ஜி.ஏ.ரோடு (விளாம்பட்டி நாடார் மாளிகை அருகில்) | |
| | உ. மேற்கு மாதா கோவில் தெரு (செயிண்ட் பீட்டர்ஸ் பள்ளி அருகில்) | 5.00 |
| 6. | இராயபுரம் தொகுதி 22–வது வட்டத்தில் உள்ள மாநகராட்சி அண்ணா பூங்காவில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவை மேம்படுத்தும் பணி | 3.75 |
| 7. | இராயபுரம் தொகுதி 22–வது வட்டத்தில் எம்.எஸ் கோயில் தெரு என்.ஆர்.டி . ரோடு சந்திக்கும் பழைய பாலத்தின் மேல் உள்ள Traffic Islands-ல் Landscape அமைக்கும் பணி. | 5.73 |
| | **மொத்தம்** | 54.35 |

இப்பணிகளை சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட வழி காட்டு நெறிமுறைகள் களின் கீழ் எடுத்து செய்ய இயலாததால் விதி தளர்வு செய்து பணிகளை மேற்கொள்ள சிறப்பு அனுமதி வழங்குமாறும் சென்னை மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

3. இப்பொருள் குறித்து அரசு நன்கு ஆய்வு செய்தது. அதன்படி சென்னை நகராட்சி ஆணையரின் கருத்திணை ஏற்று இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரைத்துள்ள பணிகள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நெறி முறைகளின்படி தடை செய்யப்பட்ட பணிகளாக இருந்த போதிலும் பணிகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இதனை ஒரு சிறப்பு நிகழ்வாக அனுமதித்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமை பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டினை தளர்வு செய்து கீழ்க்காணும் பணிகளை ரூ.54.35 (ரூபாய் ஐம்பத்து நான்கு லட்சத்து முப்பத்து ஐந்தாயிரம் மட்டும்) செலவில் 2004–2005 ஆம் ஆண்டு வரை உள்ள மற்றும் முன்னுரிமைப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் உள்ள மீதித் தொகை மற்றும் 2005–2006 ஆம் ஆண்டில் முன்னுரிமைப் பணிகள் குடிநீர் பணிகள் தெரு விளக்குகள் ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீட்டில் உள்ள மீதித் தொகையில் மேற்கொள்ள அரசால் சிறப்பு அனுமதி வழங்கப்படுகிறது.

| வ.எண் | பணி விவரம் | பரிந்துரை செய்த தொகை ரூ. இலட்சங்களில் |
|---|---|---|
| 1. | இராயபுரம் தொகுதி 18–வது வட்டத்தில் வடக்கு மாதா தெருவில் சிறிய மீன் அங்காடி ஒன்று கட்டும் பணி | 6.00 |
| 2. | இராயபுரம் தொகுதி 22–வது வட்டத்தில் கல்லறைச் சாலையில் அமைந்துள்ள அண்ணா பூங்காவில் பொதுமக்கள் உபயோகத்திற்காக காத்திருப்புக்கூடம் (Waiting shed) ஒன்று கட்டும் பணி | 6.00 |
| 3. | இராயபுரம் தொகுதி, 14–வது வட்டத்தில் உள்ள மாநகராட்சி தொற்றுநோய் மருத்துவமனையில் புறநோயாளிகள் | |

| | | |
|---|---|---|
| | மற்றும் உள்நோயாளிகளுடன் தங்கியிருப்பவர்களுக்கு என்று தனியாக காத்திருப்போர் அறை(RCC Roof மற்றும் அமரும் வசதியுடன்) கட்டும் பணி | 2.50 |
| 4. | இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் மொத்தம் 398 சாலைகளில் பெயர் எப்பொழுதும் தெரியும் வண்ணம் அலுமினியத்திலான பெயர் பலகைகள் செய்யவும் அவற்றை சிறுசுவர் எழுப்பி அதன் மீது பொருத்தவும் 768 பெயர் பலகைகள் பொருந்தும் பணி. | 25.37 |
| 5. | ஐந்து பேருந்து நிறுத்தங்களில் பயணிகளின் வசதிக்காக ஒவ்வொரு நிறுத்தத்திலும் ஷெட் ஒன்றினை அமைக்கும் பணி (ஒரு லட்சம் வீதம்)<br>அ. எஸ்.என்.செட்டி சாலை (புதுசூரன் குடி சத்திரம் அருகில்)<br>ஆ. எஸ்.என்.செட்டி சாலை கதவு எண்.325,326 மனோன்மணி கூல் பார் அருகில் )<br>இ. ஜீவரத்தினம் சாலை (புது பெட்ரோல் பங்க எதிரில்)<br>ஈ. ஜி.ஏ.ரோடு (விளாம்பட்டி நாடார் மாளிகை அருகில்)<br>உ. மேற்கு மாதா கோவில் தெரு(செயிண்ட் பீட்டர்ஸ் பள்ளி அருகில்) | 5.00 |
| 6. | இராயபுரம் தொகுதி 22–வது வட்டத்தில் உள்ள மாநகராட்சி அண்ணா பூங்காவில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவை மேம்படுத்தும் பணி | 3.75 |
| 7. | இராயபுரம் தொகுதி 22–வது வட்டத்தில் எம்.எஸ் கோயில் தெரு என்.ஆர்.டி . ரோடு சந்திக்கும் பழைய பாலத்தின் மேல் உள்ள Traffic Islands-ல் Landscape அமைக்கும் பணி. | 5.73 |
| | **மொத்தம்** | 54.35 |

4. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.10386/ஊரக வளர்ச்சித் துறை/2006 நாள்.20.2.2006–ன் ஒப்புலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்